## தலைப்பு 313 – மத்திய மாகாண சபை - 2024

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி

### 1.1 தூரநோக்கு

மத்திய மாகாணத்தின் பெருமைமிக்க மக்களுக்கு வளமான வாழ்க்கையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இலங்கையின் சிறந்த மாகாண சபையாக மாற்றுவது.

### 1.2 பணிக்கூற்று

மத்திய மாகாணத்தின் முழு மக்களின் கலாசார, சமூக, பொருளாதார மற்றும் இயற்கை சூழலைப் பாதுகாத்து, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மனித மற்றும் பௌதீக வளங்களை திறமையாகவும் திறம்படவும் பயன்படுத்துவதன் மூலம் மத்திய மாகாண மக்களுக்கு நிலையான, கௌரவமான மற்றும் உயர் வாழ்க்கைத் தரத்தை வழங்குதல்.

### 1.3 செயற்பணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

## 2. மொத்த நிதியேற்பாடும், செலவினமும்

மத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 59,221.30 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 54,286.83 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 4,934.47 மில்லியன் அதாவது 8 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

| செலவினம் | 2024.12.31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 4,248.00 | 3,258.60 | 989.40 | 23 |
| மூலதனம் | 54,973.30 | 51,028.23 | 3,945.07 | 7 |
| மொத்தம் | 59,221.30 | 54,286.83 | 4,934.47 | 8 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.